புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

செய்திக்குறிப்பு

தேதி: 19-8-2013

விவசாய பணிகளுக்கான டிரெய்லர் உரிமையாளர்கள் கவனத்திற்கு

விவசாயப் பணிகளுக்காகப் பதிவு பெற்று பயன்படுத்தப்படும் டிரெய்லர்களுக்கு பிரேக் பொருத்துவது 01.04.2009 முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக கடந்த 12.11.2008ல் 1989ம் வருட மத்திய வாகனச் சட்ட விதி 97ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 01.09.2012 முதல் அமுலுக்கு வந்த இந்த விதி 97(3)ன் செயல்பாட்டிற்கான காலக் கெடு கடந்த 31.08.2012 வரையிலும் நீட்டிக்கப்பட்டது.

இதன்படி அனைத்து விவசாயப் பணிகளுக்காகப் வாகன பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் டீரெய்லர்களுக்கு அதனுடன் இணைத்து பயன்படுத்தப்படும் டிராக்டர்களில் உள்ளது போன்று இந்தியத் தரக் கட்டுபாட்டுச் சட்டம் 1986 (63/1986)ன் கீழ் வரும் நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட ஓர் முறையான பிரேக் வசதி கட்டாயமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறல்லாத வாகனங்கள் மீதும், விவசாயப் பணிகளுக்கென பதிவு செய்யப்பட்டு மற்ற காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மீதும், பதிவு செய்யாமல் இயக்கப்படும் டிராக்டர், டரெய்லர்கள் மீதும் மோட்டார் வாகனச் சட்டப் பிரிவுகளின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிப்பதோடு, டிராக்டர்களை இயக்கும் ஓட்டுனர்களின் பாதுகாப்பை முன்னிட்டு எடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு போதிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் தொடர்புடைய அனைவரையும் புதுச்சேரி போக்குவரத்துத் துறை கேட்டுக்கொள்கிறது.

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்

GOVT OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★